**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No. 1025/2023**

**2025 – ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் தேதி வியாழக்கிழமை எ.சா. – வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திருமதி. R.புவனேஸ்வரி M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**எ.சா.** : 1

**பெயர்** : **குமார்** **தொழில்** : **எடை மிஷின் கம்பெனி**

**த/பெ.** : **மாரியப்பன்** **வட்டம்** : அரியலூர்

**கிராமம்** : அரியலூர் **வயது** : 55

**09.10.2025**

**(புகார்தாரர் ஆஜர் )**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு புகார்தாரர் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 7, 8 வருடங்களாக பழக்கம். காசோலை கொடுப்பதற்கு முன்பு எனக்கும் புகார்தாரருக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. எ.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டது காசோலை கொடுப்பதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் காசோலை கொடுத்த பின்னர் ஏற்பட்டது. எ.சா.ஆ.1 ஆவணம் அனைத்தும் காசோலைக்கு முன்பு 2022–ம் வருடம் ஏற்பட்டது என்றால் சரிதான். எ.சா.ஆ. 1 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காசோலை திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் உள்ள என்னுடைய நடப்பு கணக்கின் காசோலை என்றால் சரிதான். காசோலையில் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு நான் பணம் கொடுத்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் காசோலை கொடுத்த பிறகுதான் ஜிபேயில் பணம் கொடுத்துள்ளேன். காசோலையில் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு நானோ சக்திவேல் என்பவரோ புகார்தரருக்கு பணம் அனுப்ப வில்லை

என்றால் சரியல்ல. நான் அனுப்பியுள்ளேன். என்னுடைய செல்போன் எண். 9751348844 என்றால் சரிதான். இந்த செல்போனுக்கு புகார்தாரர் 25.01.2023 அன்று ரூ. 5000/- மற்றும் 20.01.2023 அன்று ரூ. 10,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் மேற்படி தொகைகளை எனக்கு அனுப்பியது பற்றி நான் அனுப்பிய பதில் அறிவிப்பிலோ அல்லது எனது முதல் விசாரணையிலேயோ சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு வரும் போது உண்மையான சம்பவத்திற்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை எ.சா.ஆ.2 என்றால் சரியல்ல. 11.06.2021 அன்று என் மனைவி பெயரில் புகார்தாரர் எழுதி கொடுத்ததாக எ.சா.ஆ.3 ஆவணத்தை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புகார்தாரர் என் வீட்டுக்கு வந்து மிரட்டி என் மனைவியிடமிருந்து அசல் பத்திரத்தை வாங்கி சென்றுவிட்டார் என்பதால் தாக்கல் செய்துள்ளேன். இது தொடர்பாக நானும் என் மனைவியும் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய மனைவியுடையது என்றால் சரிதான். எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள சங்கதிகள் சரிதான் என்றால் ஆமாம். அதை நான்தான் எழுதினேன் என்றால் சரிதான். எ.சா.ஆ.3 ஆவணத்தை பற்றி நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் தேதி இல்லை என்றால் சரிதான். புகார்தாரரிடம் என்னுடைய RR Scales என்ற நிறுவனத்திற்காகவும் குடும்ப செலவிற்காகவும் ரூ. 6,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை உட்பட நிரப்பப்படாத 3 காசோலைகளை புகார்தாரருக்கு கொடுத்துள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு மற்ற 2 நிரப்பப்படாத காசோலைகள் எதிரியிடம் உள்ளது என்றும் அதை திரும்ப பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 2 நிரப்பப்படாத காசோலைகள் நான் கொடுக்க வில்லை என்றாலும் நான் நிரப்பப்பட்ட ஒரு வழக்கு

காசோலை மட்டும்தான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனுக்காக ரூ. 1,20,000/– சிறிது சிறிதாக எனது மற்றும் சக்திவேல் வங்கி கணக்கு மூலமாக காசோலை தேதிக்கு பிறகு கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் கண்ட ரூ. 6,00,000/– ஏமாற்றுவதற்காக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. ரூ. 3,00,000/– மட்டுமே கடன் வாங்கியதாகவும் ரூ. 6,00,000/– வாங்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.